மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

வழக்கு எண். : STC 140/22

பெயர் : கணேசன் (PW4)

த/பெ. : தங்கராஜ்

கிராமம் :

தாலுகா :

Calling :

(Accused Perumalswamy is absent. Petition filed U/s.317 crpc and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21 th day of March 2024

<u>முதல் விசாரணை</u>

1)நான் முப்புலிவெட்டியில் வசித்துவருகிறேன். நான் எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன். சாட்சி பெருமாள்சாமியை தெரியாது.என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் இருக்கும் 2வது கையொப்பம் என்னுடையதுதான்.

2)தேதி மாதம் வருடம் நினைவில் இல்லை.வேலை முடித்து வரும்போது விபத்து நடந்த இடத்தை போலீசார்கள் பார்த்தார்கள்.என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.(**மேற்படி பார்வை மகசரில் இருக்கும் 2 வது சாட்சி கையொப்பம் அசா ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) போலீசார் விசாரணையில் என் அப்பா பெயர் தங்கராஜ் எனக்கு முப்புலி வெட்டி என்றும் சொன்னேன்.புதுப்பச்சேரியில் இருந்து புதியம்புத்தூர் செல்லும் ரோடு கிழமேல் ரோடு என்றால் தெரியாது.அங்கு சாம்பவர் ஊரணி என்ற குளம் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2)7.10.2019 அன்று 12 மணிக்கு நானும் பெருமாள்சாமியும் நின்று கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்து எழுதினார்கள் என்றாலும் அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.நான் எழுதாத பேப்பரில் தான் கையொப்பம்

செய்தேன்.மேற்படி விஷயம் உண்மை என்றாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.